## அகர இகர ஈற்று வினையெச்சத்திற்குப் பின் வழிமிகும்
## தமிழ்மொழி ஆண்டு 6

- சொற்றொடர்களில், வருமொழி 'க்,ச்,த்,ப்' ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினால் நிலைமொழி ஈற்றில் சில இடங்களில் வல்லெழுத்து மிகும்.
- வருமொழியின் முதல் எழுத்து வல்லினமாக இருந்தால் வல்லினம் மிகும். அகர, இகர ஈற்று வினையெச்சங்களின் பின் வலிமிகும்.

**எ.கா : i) செய்ய + சொல் = செய்யச்சொல் ii) ஆடி + பாடினாள் = ஆடிப்பாடினாள்**

1. மாணவர்கள் திடலில் ______________________________ விளையாடினர்.
2. கடுமையான வெயிலின் காரணமாகப் பயிர்கள் அனைத்தும் ________________________________.
3. காட்டு வழியே சென்ற சாரணர்கள் அனைவரும் ___________________ நடந்தனர்.
4. காணாமல் போன செல்லப்பிராணியை அப்பா _____________________.
5. ஆசிரியர் கொடுத்த பாடங்களை முறையாகச் _____________________.
6. பாடகி மேடையில் ________________________________ ஆடினாள்.
7. வெளிநாட்டிலுருந்து வந்த மாமா அத்தையிடம் நம் பாரம்பரிய பலகாரங்களைச் __________________________________.
8. பிரியாவிடை நிகழ்ச்சியில் மாணவர்கள் __________________________.
9. சாலையில் நிகழ்ந்த கொடூர விபத்தைப் பலரும் ____________________.
10. சிறையிலிருந்து தப்பியோட முயற்சி செய்த கைதியைக் காவல் அதிகாரிகள் _____________________________________.

| | |
|---|---|
| தேடிப் பிடித்தனர் | ஆடிப் பாடினர் |
| ஓடிப் பிடித்தனர் | செய்யப் பணித்தார் |
| பாடிக் கொண்டே | பார்க்கச் சென்றனர் |
| ஓடிப் பிடித்து | பாடிக் கொண்டே |
| வாடிப் போயின | செய்யச் சொன்னார் |

LIVEWORKSHEETS